
# சீறத்துன்னபி ﷺ

## நாள் 13



# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உடலை காயப்படுத்தியது
- பகுதி 2: நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக அவர்களது பெரிய தந்தை அபூலஹப் பயன்படுத்திய தந்திரங்கள்
- பகுதி 3: நபி (ஸல்) அவர்களை உடலாலும், உள்ளதாலும்  துன்புறுத்தியது
- பகுதி 4: மற்ற முஸ்லிம்களை துன்புறுத்தி, சித்திரவதை செய்தது
- பகுதி 5: அடிமையாக இருந்த பிலால் இப்னு ரபாஹ் சந்தித்த சித்திரவதைகள்

# பகுதி 1: நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உடலை காயப்படுத்தியது

- இஸ்லாம் மக்களிடையே வேகமாக பரவியபோது, அதை தடுப்பதற்கான அனைத்து யுக்திகளும் தோல்வியடைந்த நிலையில் குரைஷிகள், நபி (ஸல்) அவர்களை உடல் ரீதியாக தாக்க ஆரம்பித்தனர்.



- ஸஹீஹ் முஸ்லிமில் உள்ள ஒரு ஹதீஸில் பதிவாகியுள்ளது: ஒரு முறை அபூஜஹ்ல், ''உங்களிடையே முஹம்மது (இறைவனை வணங்குவதற்காக) மண்ணில் தமது முகத்தை வைக்கிறாரா?'' என்று கேட்டான். அப்போது ''ஆம்'' என்று சொல்லப்பட்டது. அவன், ''லாத் மற்றும் உஸ்ஸாவின் (மக்காவின் சிலைகள்) மீதாணையாக! அவ்வாறு அவர் செய்துகொண்டிருப்பதை நான் கண்டால், அவரது பிடரியின் மீது நிச்சயமாக நான் மிதிப்பேன்; அல்லது அவரது முகத்தை மண்ணுக்குள் புதைப்பேன்'' என்று சொன்னான்.

- அவ்வாறே, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கஃபாவில் தொழுதுகொண்டிருந்தபோது, அபூஜஹ்ல் தம் கூட்டாளிகளுடன் அங்கே வந்தான்.

- நபி (ஸல்) அவர்கள் ஸஜ்தாவுக்காக குனிந்தபோது, அபூஜஹ்ல், நபி (ஸல்) அவர்களின் பிடரியின் மீது மிதிப்பதற்காக அவர்களை நோக்கி வந்தான்.

- அப்போது அவன் தன் கைகளால் எதிலிருந்தோ தப்பிவருவதைப் போன்று சைகை செய்தவாறு வந்தவழியே பின்வாங்கி ஓடினான்.

- இதைக் கண்ட மக்கள் திடுக்குற்றனர். அவனிடம், ‘‘உனக்கு என்ன நேர்ந்தது?’’ என்று கேட்கப்பட்டது. அதற்கு அவன், ‘‘எனக்கும் அவருக்குமிடையில் நெருப்பாலான அகழ் ஒன்றையும், இறக்கை(கள் கொண்ட வானவர்)களையும் கண்டேன்’’ என்று சொன்னான்.

- இதைப் பற்றி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பின்னர் கூறுகையில், ‘‘அந்த நெருப்பு வானவர்களால் இறக்கப்பட்டது; அவன் மட்டும் என்னை நெருங்கியிருந்தால் அவனுடைய உறுப்புகளை ஒவ்வொன்றாக வானவர்கள் பிய்த்தெடுத்திருப்பார்கள்’’ என்று சொன்னார்கள்.

- இந்த சம்பவத்திற்குப் பிறகு, அபூஜஹ்ல் கடுமையாகக் கண்டிக்கப்பட்ட ஸூரா அல்அலக்கின் எஞ்சிய வசனங்களை அல்லாஹ் இறக்கினான்.

- தடை செய்கிறானே (அபூஜஹ்ல்), (அவனை) நீர் பார்த்தீரா?

- ஓர் அடியாரை (நபி ஸல்) – அவர் தொழும்போது,

- நீர் பார்த்தீரா? அவர் நேர்வழியில் இருந்துகொண்டும்,

- அல்லது, அவர் இறையச்சத்தைக் கொண்டு ஏவியவாறு இருந்தும்,

- அவரை அவன் பொய்யாக்கி, முகத்தைத் திருப்பிக்கொண்டான் என்பதை நீர் பார்த்தீரா?

- நிச்சயமாக அல்லாஹ் (அவனைப்) பார்க்கிறான் என்பதை அவன் அறியவில்லையா?

- அப்படியல்ல! அவன் விலகிக்கொள்ளவில்லையானால், நிச்சயமாக நாம் (அவனுடைய) முன்னெற்றி ரோமத்தைப் பிடித்து அவனை இழுப்போம்.

- தவறிழைத்துப் பொய்யுரைக்கும் முன் நெற்றி ரோமத்தை, ஆகவே, அவன் தன் சபையோரை அழைக்கட்டும்.

- நாமும் நரகக் காவலாளிகளை விரைவில் அழைப்போம்.

- (அவன் கூறுவதுபோல்) அல்ல! அவனுக்கு நீர் கட்டுப்படாதீர்! (உம் இறைவனுக்கு) ஸுஜூது செய்து (வணங்கி அவனை) நெருங்குவீராக! –

ஸூரா அல்அலக் (96: 9-19)

- மற்றொரு நேரத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு நேர்ந்த மிக மோசமான ஒரு சம்பவத்தை அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) விவரிக்கிறார்.

- ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் கஃபாவின் முன் தொழுது கொண்டிருந்த போது, உக்பா இப்னு அபீமுஜத் என்பவன் நபியவர்களுக்கு பின்னால் வந்தான்.

- உக்பா தனது சால்வையை நபி (ஸல்) அவர்களின் கழுத்தில் சுற்றி அவர்களை நெரிக்கத் தொடங்கினான்.

- இதனால் நபி (ஸல்) அவர்கள் மூச்சு விட முடியாமல் திணறிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அப்போது யாரும் தலையிட்டு, அவர்களைக் காப்பாற்ற முன்வரவில்லை.

- இறுதியாக, அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு இது பற்றி தெரிவிக்கப்பட்டது. அவர்கள் ஓடோடி வந்து உக்பாவைத் தள்ளிவிட்டு, நபி (ஸல்) அவர்களைக் காப்பாற்றினார்கள். ''என் இறைவன் அல்லாஹ்வேதான்!'' என்று ஒரு மனிதர் கூறியதற்காக அவரை நீங்கள் கொன்றுவிடுவீர்களா? அவர் உங்கள் இறைவனிடமிருந்து வந்த அத்தாட்சிகளைத்தானே உங்களிடம் கொண்டுவந்துள்ளார்'' என்று சப்தமிட்டு கூறினார்கள். (இப்னு இஸ்ஹாக், அல்சிரா அல்நபவிய்யா)

- அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறிய அதே வார்த்தைகளைக் கொண்டு அல்லாஹ் குர்ஆன் வசனங்களை வெளிப்படுத்தி அவர்களைக் கௌரவப்படுத்தினான்:

- ஃபிர்அவ்னின் குடும்பத்தாரில் தம் நம்பிக்கையை மறைத்து வைத்திருந்த, நம்பிக்கை கொண்ட மனிதர் ஒருவர் கூறினார்: ''என் இறைவன் அல்லாஹ்வேதான்!'' என்று ஒரு மனிதர் கூறியதற்காக அவரை நீங்கள் கொன்றுவிடுவீர்களா? மேலும், அவர் மெய்யாகவே உங்கள் இறைவனிடமிருந்து தெளிவான அத்தாட்சிகளை உங்களிடம் கொண்டுவந்துள்ளார். - ஸூரா அல்முஃமின் (40:28)

## பகுதி 2: நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக அவர்களது பெரிய தந்தை அபூலஹப் பயன்படுத்திய தந்திரங்கள்



- நபி (ஸல்) மீது வெறுப்பைக் காட்ட மிகவும் கீழ்த்தரமான வேலைகளை அபூலஹப் செய்தான்.

- நபி (ஸல்) வீதியில் செல்லும்போது அபூலஹப் அவர்கள் மீது கற்களை எறிவான். அவனது மனைவி கயிறுகளால் முட்களைக் கட்டி, அவற்றை நபி (ஸல்) அவர்கள் செல்லும் பாதைகளில் போட்டுவிடுவாள்.

- நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் செய்தியைப் பிரச்சாரம் செய்ய செல்லும்போது, அபூலஹப் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று, அம்மக்களிடம் 'இவர் ஒரு பொய்யர்' என்று கூறுவான்.

- நபி (ஸல்) அவர்களின் இரண்டு மகள்களும், அபூலஹபின் இரண்டு மகன்களுடன் திருமணம் செய்து வைக்கப்பட்டனர். இரண்டு மகள்களும் சிறுவயதினராக (மைனர்) இருந்ததால், இன்னும் திருமண தாம்பத்தியம் நடைபெறவில்லை.

- இந்நிலையில் அபூலஹபும், அவரது மனைவியும் தங்களது மகன்களைத் தூண்டி, நபி (ஸல்) அவர்களின் மகள்களை விவாகரத்து செய்ய வைத்துவிட்டனர்.

- அவ்விருவரும் நபி (ஸல்) அவர்களுக்கு பெரிய தந்தை, பெரிய தந்தையின் மனைவியாக இருந்தபோதிலும், இந்த விவாகரத்தைச் செய்ய வைத்தனர். இச்செயல் அரேபிய மக்களின் பொதுவான பாரம்பரியத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டு இருந்தது. பொதுவாக அதே குலத்து மக்கள் தங்கள் நெருங்கிய உறவினர்களை வலுவாக ஆதரிப்பவர்களாக இருப்பார்கள்.

- அபூலஹப் மற்றும் அவரது மனைவியின் இத்தகைய செயல்களுக்காக,

அவர்களைக் கண்டித்து அல்லாஹ் ஒரு முழு ஸூராவையும் (ஸூரா அல்மஸாத் / அல்லஹப் – 111: 1 – 5) இறக்கினான்.

- இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்: மக்காவின் தலைவர்கள் முன் நபி (ஸல்) அவர்கள் பற்றி பேச்சு வரும்போதெல்லாம், ‘‘அவரை விட்டு விடுங்கள்; ஏனென்றால் அவர் ஆண் சந்ததி இல்லாத மனிதர் (அப்தார்). அவர் இறந்தபின், அவரை நினைவுகூற யாரும் இருக்க மாட்டார்கள்’’.

- நபி (ஸ ல்) அவர்களுக்கு அவர்களது மனைவி கதீஜா (ரலி) அவர்கள் மூலம் இரண்டு மகன்கள் மற்றும் நான்கு மகள்கள் இருந்தனர். முதலில் அவர்களது மகன் காசிம் இறந்து விட்டார்; பின்னர் அவரது மற்றொரு மகன் அப்துல்லாவும் இறந்து விட்டார். இந்தச் செய்தியால் மகிழ்ச்சியடைந்த அபூ ல ஹபும் மற்ற மக்காவின் தலைவர்களும், ‘‘முஹம்மதுடைய வாரிசு மு டிவுக்கு வந்துவிட்டது; இப்போது அவர் அப்தார் (அதாவது வேரிலிருந்து துண்டிக்கப்பட்டவர் – சந்ததியற்றவர்)’’, என்று கூறிவந்தனர்.

- அல்லாஹ் பின்னர் ஸூரா அல்கவ்ஸரை இறக்கினான். ‘‘(நபியே!) நிச்சயமாக நாம் உமக்குக் கவ்ஸர் (அளவற்ற ஆசீர்வாதங்கள் – இது கியாமத் நாளில் ந பி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்படும் ஒரு சிறப்பு நீரூற்றின் பெயரும் கூட) கொடுத்திருக்கின்றோம்! எனவே, உம் இறைவனுக்கு நீர் தொழுது, (குர்பானியும்) பலியும் கொடுப்பீராக! நிச்சயமாக உம்முடைய பகைவன் (எவனோ) அவன்தான் சந்ததியற்றவன். – ஸூரா அல்கவ்ஸர் (108: 1–3)

## பகுதி 3: நபி (ஸல்) அவர்களை உடலாலும், உள்ளதாலும் துன்புறுத்தியது

- நபி (ஸல்) அவர்கள் மீது கஃபாவிற்கு அருகில் காஃபிர்கள் பகிரங்கமாக செய்த மிக மோசமான செயல் ஒன்றை இப்னு மஸ்ஊத் (ரலி) விளக்கிக் கூறுவதை ஸஹீஹுல் புகாரீயில் காணலாம்.

- ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் கஃபாவின் முன் தொழுது கொண்டிருந்தார்கள்.

- ஒரு நாள் முன்பு பலியிடப்பட்ட ஒட்டகத்தின் சடலத்திலிருந்து அதன் குடல்களை கொண்டு வந்து, நபி (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போது அதை அவர்கள் முதுகில் எறியுமாறு அபூஜஹ்ல் தனது கூட்டாளிகளைத் தூண்டினான்.



- இதை அவன் அங்கு அமர்ந்திருந்த தனது சகாக்களுக்கு சவாலாக எடுத்துக்கொள்ளுமாறு கூறினான்.

- அவர்களில் மிக மோசமான ஒருவனான உக்பா இப்னு அபிமுஐத் என்பவன் எழுந்து நின்று, சிதைந்து கொண்டிருந்த இறந்த ஒட்டகத்தின் உடலுக்கு அருகில் சென்றான்.

- பின்னர் அவன் தனது கைகளால் குடலையும், ஒட்டகத்தின் வயிற்றுப் பகுதியையும் எடுத்து, கஃபாவின் அருகில் கொண்டு வந்தான்.

- தொழுதுகொண்டிருந்த நபி (ஸல்) அவர்கள் ஸஜ்தாவுக்குச் சென்றபோது, அந்த கழிவுகளையெல்லாம் நபி (ஸல்) அவர்களின் தலையில் கொட்டினான்.

- அதன் எடை மிகவும் அதிகமாக இருந்ததால், நபி (ஸல்) அவர்களால் தங்களது தலையை தூக்க முடியவில்லை.

- அப்போது அங்கு கூடியிருந்த காஃபிர்கள் விழுந்து விழுந்து, ஒருவருக்கொருவர் தட்டிக்கொடுத்துக் கொண்டு, பலமாகச் சிரித்தனர்.

- அப்போது 8 வயதேயான நபிகளாரின் மகள் பாத்திமா (ரலி) அவர்களிடம் சிலர் சென்று நடப்பதைக் கூறி, அவரது தந்தைக்கு உடனடி உதவி தேவை என்று தெரிவித்தனர். அதுவரையில் நபி (ஸல்) அவர்கள், கனத்த எடையைத் தாங்கிக்கொண்டு ஸஜ்தாவிலேயே இருந்தார்கள்.

- பாத்திமா (ரலி) அழுது கொண்டே நபி (ஸல்) அவர்களிடம் விரைந்து வந்தார்கள். அவர்களது முதுகில் இருந்த கழிவுகளை அகற்றினார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் எழுந்து நின்று, சபையில் இருந்த மக்களைப் பார்த்து, அல்லாஹ்விடம் துஆ செய்வதற்காக தமது கைகளை உயர்த்தினார்கள்.

- நபி (ஸல்) அவர்களை இந்த நிலையில் பார்த்த மக்கள் அனைவரும் அமைதியானார்கள்.

- பின்னர் நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொருவரின் பெயரையும் மூன்று முறை குறிப்பிட்டு துவா செய்யத் தொடங்கினார்கள். அப்போது அங்கிருந்த அனைவரின் தோற்றமும், கொடிய வெளிறிய முகமாக மாறியது.

- அந்தக் கூட்டத்தில் 7 பேர் இருந்ததாக இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

- மேலும் இப்னு மஸ்ஊத் (ரலி) கூறுவது: ‘‘அல்லாஹ்வின் மீது ஆணையாக கூறுகிறேன்! அந்த ஏழு பேரும் பத்ர் போரில் கொல்லப்பட்டதை என் கண்களால் பார்த்தேன். அவர்களின் உடல்கள் பத்ரின் கிணறுகளுக்கு இழுத்துச் வரப்பட்டு, அதில் எறியப்பட்டது..

## பகுதி 4: மற்ற முஸ்லிம்களை துன்புறுத்தி, சித்திரவதை செய்தது

- உன்னத பரம்பரையிலிருந்து வந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே இவ்வாறு துன்புறுத்தப்பட்டபோது, ஆரம்பகால மதம் மாறியவர்களும், குறிப்பாக அதிலிருந்த அடிமைகளும் எவ்வளவு கடுமையாக துன்புறுத்தப்பட்டிருப்பார்கள் என்பதை நாம் நினைத்துப் பார்க்க முடிகிறது.

- இத்தகைய துன்புறுத்தலுக்கும், சித்திரவதைக்கும் மூல காரணமாக இருந்தவன் அபூஜஹ்ல். அதனால்தான் நபி (ஸல்) அவர்கள் அவனை, ‘‘என் உம்மத்தின் பிர்அவ்ன்’’ என்று அழைத்தார்கள்.

- அபூஜஹ்ல் கீழ்கண்ட தந்திரங்களைப் பின்பற்றினான்.

- இஸ்லாத்திற்கு வந்த குரைஷிகள் உயர்குடியின் மக்களாக இருந்தால், அவர்களுக்கு உடலால் தீங்கு செய்ய மாட்டான். ஆனால், அவர்களை கேலி செய்வதும், வாய்மொழியால் பழித்து துஷ்பிரயோகம் செய்வதும் அவனது வழக்கமாக இருந்தது.

- இஸ்லாத்திற்கு வந்த குறைஷி ஒரு வணிகராக இருந்தால், அவரது வியாபாரத்தை புறக்கணிக்க வைப்பான். அதனால் மக்காவில் அவரிடம் யாரும் வாங்குவது மற்றும் விற்பது இல்லை என்பதை செயல்படுத்துவான்.

- மதம் மாறியவர்கள் அடிமைகளாக இருந்தால், அவர்களை சித்திரவதை செய்து கொல்லுமாறு அவர்களின் உரிமையாளர்களிடம் அபூஜஹ்ல் கூறுவான். பலதடவை அவனே அம்மக்களை சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தியிருக்கிறான்.

- ஸஹீஹுல் புகாரீயில் இப்னு மஸ்ஊத் (ரலி) ஒரு அறிவிப்பில் கூறுவது:

- ‘‘ஆரம்பத்தில் அடிமைகளாக இருந்து, இஸ்லாத்திற்கு வந்தவர்களை, குறைஷிகள் அவர்களைச் சுற்றி வளைத்து கடுமையாக சித்திரவதை செய்வார்கள்.

- சில சமயங்களில் குறைஷிகள் அவர்களது உடலில் இரும்பை வைத்து கட்டி, பின்னர் அவர்களை சுடும் பாலைவன மணலில் விட்டுவிடுவார்கள்.

- அவ்வாறு துன்புறுத்தப்பட்டவர்களில், பிலால் இப்னு ரபாஹ்வைத் தவிர மற்ற அனைவரும் இந்தக் கொடுமைகளை தாங்க முடியாமல், குறைஷிகள் கேட்க விரும்பிய வார்த்தைகளைக் கூறிவிட்டனர்’’.

## பகுதி 5: அடிமையாக இருந்த பிலால் இப்னு ரபாஹ் சந்தித்த சித்திரவதைகள்

- பிலால் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் முன் தனது உயிருக்கு எந்த மதிப்பும் இருப்பதாக கருதவில்லை. ஆதலால் அவர்கள் அனுபவித்த கொடுமைகளால் சிறிதும் மனம் தளரவில்லை. எனவே குறைஷிகள் அவர்களைச் சித்திரவதை செய்வதில் அதிக கவனம் செலுத்தினர்.

- இப்னு மஸ்ஊத் (ரலி) கூறுகிறார்கள்: ‘‘பிலாலை மக்காவின் கொடூரமான மக்களிடம் ஒப்படைப்பதை நானே பார்த்தேன்; அவர்கள் பிலாலின் கழுத்தில் கயிற்றைச் சுற்றி, மக்காவின் தெருக்களில் அவரை இழுத்துச் சென்றனர்.’’

- பிலால் (ரலி) அவர்களின் உரிமையாளர் உமையா இப்னு கலஃப் தனது அடிமையான பிலால் (ரலி) அவர்களை மிக கொடுமையாக சித்திரவதை செய்தார். உமையா தனது மற்ற அடிமைகளுடன் காலையில் பிலால் (ரலி)

அவர்களை பாலைவனத்திற்கு அழைத்துச் செல்வார்.

- 🌲 பின்னர் பிலால் (ரலி) அவர்களின் மார்பில் ஒரு பெரிய பாறையை வைத்து, அவரை பாலைவனத்தில், உணவு, தண்ணீர் இல்லாமல் கடுமையான வெயிலில் விட்டுவிடுவார்.

- 🌲 பிலால் (ரலி) மீது போடப்பட்ட பாறையில் இருந்த சூட்டில், பச்சையான மாமிசத்தை சமைத்து உண்ணலாம். அந்த அளவுக்கு சூடு இருந்ததாக ஒரு குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

- 🌲 ஆனால் பிலால் (ரலி) அதையெல்லாம் சகித்துக்கொண்டு சத்தமாக, ‘‘அஹதுன் அஹத்’’ அதாவது ‘‘ஒரே இறைவன், ஒரே இறைவன்’’ என்று அழைத்தார்கள். மேலும் அவர்கள், ‘‘நான் லாத்தையும், உஸ்ஸாவையும் நிராகரிக்கிறேன்; நான் அல்லாஹ்வை மட்டுமே நம்புகிறேன்’’ என்று கூறுவார்கள்.

- 🌲 இந்நிலையில் ஒருபோதும் குரைஷிகள் கேட்க விரும்பும் ஒரு வார்த்தையைக் கூட அவர்கள் கூறவில்லை.

- 🌲 அல்லாஹ், அபூபக்கர் (ரலி) மூலம் பிலால் (ரலி) அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து உதவி செய்தான். பிலால் (ரலி) அவர்கள் வாழ்க்கையின் பிற்பகுதியில் அல்லாஹ் அவர்களுக்கு ஒரு பெரிய கண்ணியத்தைக் கொடுத்தான்.



- 🌲 பிலால் (ரலி) மதீனாவில் உள்ள நபிகளாரின் பள்ளிவாசலின் முஅத்தீனாக ஆக்கப்பட்டார். சித்திரவதையின் போது ‘‘அஹதுன் அஹத்’’ என்று அழைத்த அதே குரல், நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு நாளைக்கு ஐந்து முறை

தொழுகைக்கு அழைக்கும் (பாங்கு – அதான்) குரலாக மாறியது.

- மேலும் மக்கா வெற்றியின்போது, பிலால் (ரலி) அவர்கள் கஃபாவின் மீது ஏறி, மக்காவில் முதல் பாங்கை ஒலிக்கச் செய்தார்.